## August 5, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மின்சார வாகன உற்பத்தியின் தலைநகரமாக தமிழகம் விளங்குகிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார், நாட்டின் மொத்த மின்வாகன உற்பத்தியில் 40 சதவீதம் தமிழகத்திலிருந்துதான் உற்பத்தியாகிறது என்றும் அவர் கூறினார்.
2. தூத்துக்குடி சில்லாநத்தத்தில் உள்ள சிப்காட் தொழில்பூங்காவில் வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின் வாகன உற்பத்தி ஆலையைத் தொடங்கிவைக்கப்பட்டது. கடந்த 2024, ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது இந்த ஆலையை ரூ.16 ஆயிரம் கோடி முதலீட்டில் அமைப்பது என்றும், 3,500 பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பது என்றும் உறுதி செய்யப்பட்டு முதல்வர் முன்னிலையில் தமிழக அரசுக்கும் வின்ஃபாஸ்ட் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
3. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையானது இந்திய ராணுவத்தின் நுண்ணறிவுமிக்க பதில் தாக்குதல் என்று ராணுவத் தலைமைத் தளபதி உபேந்திர துவிவேதி தெரிவித்தார். சென்னை ஐஐடி வளாகத்தில் அக்னி ஷோத் 'என்ற ராணுவ ஆராய்ச்சிப் பிரிவை, தொடங்கிவைத்தார்.
4. இஸ்ரேலும் அமெரிக்காவும் தங்கள் மீது கடந்த ஜூன் மாதம் நடத்திய தாக்குதலின் எதிரொலியாக, புதிய தேசிய பாதுகாப்பு கவுன்சிலை ஈரான் உருவாக்கியுள்ளது. அந்த கவுன்சிலுக்கு அதிபர் மசூத் பெஸெஷ்கியான் தலைமை வகிப்பார்.
5. தமிழகத்தில் 280 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. தமிழக காவல் துறையின் கீழ் 1,366 ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் நிலையங்களும், 424 உதவி ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் நிலையங்களில்,280 காவல் நிலையங்கள் தரம் உயர்த்ததப்பட்டு முதல்வர் அறிவித்தார்.
6. ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதோடு மட்டுமல்லாமல், அதை பிற நாடுகளுக்கு அதிக லாபத்துக்கு விற்பனை செய்துவருவதால் இந்தியாமீது விதிக்கப்பட்டுள்ள வரி படிப்படியாக மேலும் அதிகரிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.
7. 2024-ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் நடந்தது.
8. தூத்துக்குடி மாவட்டத்தில் நியோ டைடல் பார்க் தொடங்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில், டாடா எரிசக்தி மற்றும் விக்ரம் சோலார் எரிசக்தி ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
9. தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், ரூ.1,230 கோடி முதலீடு, 3,100 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 4 திட்டங்களின் வணிக உற்பத்தியை தொடங்கிவைத்த முதல்வர்.

   i. தூத்துக்குடி மாவட்டத்தில் 250 ஏக்குகர் பரப்பளவில், ஒரு விண்வெளி பூங்கா அமைக்கப்படும். இந்த பூங்கா, விண்வெளி துறைக்குத் தேவையான கருவிகளின் உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

ii. கப்பல் கட்டுமானத் துறையை மேம்படுத்த பிரத்யேக நிறுவனம் விரைவில் தொடங்கப்படும்.

iii. முருங்கை ஏற்றுமதி மற்றும் சாகுபடி கூட்டமைப்புக்காக, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி 8 மாவட்டங்களில் ரூ. 5 கோடியே 59 லட்சம் செலவினத்தில் ஒரு பொது வசதி மையம் நிறுவப்படும்.

iv. திருநெல்வேலி மாவட்டத்தில், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் மண்டலப் பிரிவு அமைக்கப்படும்